**இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், நாகர்கோவில்**

முன்னிலை – **திரு.S. அசன் முகம்மது, பி.ஏ.,பி.எல்.,**
இரண்டாவது கூடுதல் சார்பு நீதிபதி,
நாகர்கோவில்.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண். 420/2023**

பஞ்சாப் நேஷனல் வங்கி (முன்பு ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ்),
வெட்டுர்ணிமடம் கிளைக்காக,
அதன் கிளை மேலாளர் ... வாதி

/எதிர்/

1. அங்கயற்கண்ணி சுபாஷினி
2. சண்முக ராஜீ
3. பழனியம்மாள் ... பிரதிவாதிகள்

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக முடிவான விசாரணைக்கு 26.03.2024 அன்று வந்தபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு. K. தனுஜெயன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் ஒரு தலைப்பட்சமாக்கப்பட்டும், வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாத உரை கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

வாதிக்கு பிரதிவாதி ரூ.6,62,118/– க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை 11.25% பின்வட்டி செலுத்த தீர்ப்பாணை பிறப்பிக்கக் கேட்டு வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின்**

**சுருக்கம் :-**

25.08.2007 அன்று பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதியின் முதுகலை கணினிப்பயன்பாட்டியல் (M.C.A) படிப்பிற்காக கல்விக் கடன் ரூ.1,51,500/- கல்விக் கடன் கேட்டு வாதி வங்கிக்கு விண்ணப்பித்தார்கள். வாதி வங்கியானது 19.10.2007 ம் தேதியன்று கடன் கணக்கு எண்.1135641100648 -ன் படி ரூ.1,51,500/- கடன் அனுமதி வழங்கியது. மேற்படி கடனுக்காக 25.10.2007 அன்று பிரதிவாதிகள் மேற்படி கடனை 84 மாதத் தவணைகளில் குறைந்தபட்ச வட்டியாகிய 11.25% வட்டியுடன் திரும்ப செலுத்துவதாக கல்விக் கடன் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார்கள். அது மட்டுமன்றி மாத தவணைகளை ரிசர்வ் வங்கியின் மாறுகின்ற வட்டி விகிதங்களுக்கேற்ப குறிப்பிட்ட காலத்தில் திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டார்கள்.

கல்விக்கடன் ஒப்பந்தத்தின்படி மேற்படி கடன் தொகையானது 1-ம் பிரதிவாதி படிப்பு முடித்து 12 மாதங்களுக்குப் பின் 84 மாத தவணைகளாக வட்டியுடன் செலுத்தப்பட வேண்டும். கல்விக்கடன் ஒப்பந்தத்தின்படி 2011 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் பிரதிவாதிகள் கடன் தவணைகளை செலுத்த வேண்டும். ஆனால் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டபடி கடனை திரும்ப செலுத்தவில்லை.

3-ம் பிரதிவாதி கடனை புதுப்பிக்கும் பொருட்டு வாதி வங்கியில் 19.02.2014, 30.06.2016, 15.03.2019 மற்றும் 16.09.2020 ஆகிய தேதிகளில் கடன் ஒப்புதல் அட்டை எழுதிக்கொடுத்தார். 3-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் ஒப்புதல் அட்டை 1ம், 2ம்

பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தும். எனவே மேற்படி வழக்கு காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் ஒப்புக்கொண்ட படி கடனை திருப்பி செலுத்தாததால் 18.07.2023ம் தேதியன்று வழக்கறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன் பின்னரும் பிரதிவாதிகள் கடனை திருப்பிச் செலுத்தாததால் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடன் தொகைக்கு பிரதிவாதிகள் தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாவார்கள். வாதிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.6,62,118/- சம்பந்தமான கணக்கு பட்டியலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதியின் கணக்கு விவரப்பட்டியல் படி பிரதிவாதி வாதி வங்கிக்கு ரூ.6,62,118/- செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவார். எனவே வாதிக்கு பிரதிவாதி ரூ.6,62,118/- க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை 11.25% பின்வட்டி செலுத்த தீர்ப்பாணை பிறப்பிக்கக் கேட்டு வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பி ஆஜராகாத நிலையில் ஒரு தலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள். வாதி வங்கியின் மேலாளர் ராஜேஷ் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் வாதி கோரும் தொகை வாதி வங்கிக்கு

கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

வழக்குரை கூற்றை நிரூபிக்கும் விதமாக வாதி வங்கி தரப்பில் ராஜேஷ் வா.சா.1 ஆக முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். 25.08.2007 அன்று பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதியின் முதுகலை கணினிப்பயன்பாட்டியல் (M.C.A) படிப்பிற்காக கல்விக் கடன் ரூ.1,51,500/– கல்விக் கடன் கேட்டு வாதி வங்கிக்கு விண்ணப்பித்தார்கள். வாதி வங்கியானது 19.10.2007 ம் தேதியன்று கடன் கணக்கு எண்.1135641100648 –ன் படி ரூ.1,51,500/– கடன் அனுமதி வழங்கியது. அதற்கு 25.08.2007 தேதியிட்ட கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1, 19.10.2007 தேதியிட்ட கல்வி கடன் அனுமதி கடிதம் வா.சா.ஆ.2, 25.10.2007 தேதியிட்ட கல்வி கடன் ஒப்பந்தம் வா.சா.ஆ.3, 19.02.2014 தேதியிட்ட உயிர்ப்பித்தல் கடிதம் வா.சா.ஆ.4, 30.06.2016 தேதியிட்ட உயிர்ப்பித்தல் கடிதம் வா.சா.ஆ–5, 15.03.2019 தேதியிட்ட உயிர்ப்பித்தல் கடிதம் வா.சா.ஆ.6, 16.09.2020 தேதியிட்ட உயிர்ப்பித்தல் கடிதம் வா.சா.ஆ–7, 18.07.2023 தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிவிப்பு நகல் வா.சா.ஆ.8, 17.07.2023 தேதியிட்ட பிரதிவாதிகள் செலுத்தவேண்டிய தொகை சம்பந்தமான கணக்கு விவரப்பட்டியல் வா.சா.ஆ.9 என்று கூறியுள்ளார். இதன் அடிப்படையில் இந்த வழக்கானது மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் காலாவதி சட்டத்தினால் வழக்கு பாதிக்கப்படவில்லை என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதன் பின்பும் பிரதிவாதி கடனை செலுத்தவில்லை. தற்போது வரை இந்த

பிரதிவாதி செலுத்த வேண்டிய தொகை ரூ.6,62,118/– என்பது கணக்கு விவரப் பட்டியலைப் பார்த்தால் தெரிய வருகிறது. பிரதிவாதி ரூ.1,18,500/– கடன் வாங்கியுள்ளார் என்பதும் தெரியவருகிறது. வா.சா.ஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்களையும் மறுக்கும் விதமாக பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. இந்த நிலையில் வாதி தரப்பு சாட்சியம் மற்றும் வாதி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ. 1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து பார்க்கும் போது, வழக்குரை கூற்றை வாதி நிரூபித்துள்ளார் என்றும், எனவே வாதி இந்த வழக்கில் கோரியுள்ள தொகை வாதிக்கு வழக்கின் செலவுத் தொகையுடன் கிடைக்கக் கூடியது என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் ரூ.6,62,118/– ம் அசல் தொகை ரூ.1,18,500/– க்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை 11.25% வருட வட்டியும், அதன்பின் தொகை செலுத்தும் காலம் வரை 6% வருட வட்டியும் இந்த வழக்கின் செலவுத் தொகையும் வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டு மென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2ம் நாள் என்னால்

திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/−), S. அசன் முகம்மது,
இரண்டாவது கூடுதல் சார்பு நீதிபதி.
நாகர்கோவில்.

1. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி −
திரு. ராஜேஷ்

2. வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் −

| | | |
|---|---|---|
| 1. | 25.08.2007 | கல்வி கடன் விண்ணப்பம் |
| 2. | 19.10.2007 | கல்வி கடன் அனுமதிக் கடிதம் |
| 3. | 25.10.2007 | கல்வி கடன் ஒப்பந்தம் |
| 4. | 19.02.2014 | உயிர்ப்பித்தல் கடிதம் |
| 5. | 30.06.2016 | உயிர்ப்பித்தல் கடிதம் |
| 6. | 15.03.2019 | உயிர்ப்பித்தல் கடிதம் |
| 7. | 16.09.2020 | உயிர்ப்பித்தல் கடிதம் |
| 8. | 18.07.2023 | பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிவிப்பு நகல் |
| 9. | 17.07.2023 | பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய தொகை சம்பந்தமான கணக்கு விவரப்பட்டியல் |

3. பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி − இல்லை

4. பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்− இல்லை

(ஒம்/−), S. அசன் முகம்மது,
இரண்டாவது கூடுதல் சார்பு நீதிபதி.
நாகர்கோவில்.